ISSN 2454-3993

JOURNAL WITH 3.085 IMPACT FACTOR SIJ TAMIL STUDIES

SHANLAX #SINCE1990

▪ மலர் 3 ▪ சிறப்பிதழ் 1 ▪ பிப்ரவரி, 2019

சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

நாள்: 1.02.2019 இடம்: திருவள்ளுவர் கல்லூரி, தமிழ்த்துறை, பாபநாசம்

திருவள்ளுவர் கல்லூரி – தமிழ்த்துறை – பாபநாசம்
ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி – தமிழ்த்துறை – குற்றாலம்
ராணி அண்ணா மகளிர் கல்லூரி – தமிழ்த்துறை – திருநெல்வேலி
ஸ்ரீ. எஸ். ஆர். என். எம். கல்லூரி – தமிழ்த்துறை – சாத்தூர்
பிரபா இலக்கியப் பதிப்பகம் – சங்கரன்கோவில்

இணைந்து நடத்தும் மாபெரும்

# பன்னாட்டுத் தமிழ்க் கருத்தரங்கம்
(International Tamil Conference)

தொகுதி - I

ஆய்வுப்பொருள்

# தமிழ் இலக்கியங்கள் உணர்த்தும் தொன்மைகளும் புதுமைகளும்

UGC Approved Journal Number: 40729
VOLUME 3 | SPECIAL ISSUE 1 | FEBRUARY 2019
Shanlax International Journal of Tamil Studies
A Peer-reviewed- Refereed Scholarly Quarterly Journal Globally Indexed with Impact Factor

ISSN INTERNATIONAL STANDARD SERIAL NUMBER INTERNATIONAL CENTRE
PKP PUBLIC KNOWLEDGE PROJECT
OJS OPEN JOURNAL SYSTEMS
SHANLAX INTERNATIONAL JOURNALS
editorsij@shanlaxjournals.in | www.shanlaxjournals.in

# சிலப்பதிகாரத்தில் காணப்படும் தமிழிசை செய்திகள்

**சி. சூரியகுமார்**
முதுநிலை விரிவுரையாளர், இசைத் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### முகவுரை

"நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் ஆரம் படைத்த தமிழ்நாடு" என்ற பாரதியின் பாடல் வரிகளிலே சிலப்பதிகாரத்தின் மாண்பு உணர்த்தப்படுகின்றது. தமிழிலுள்ள ஐம்பொரும் காப்பியங்களிலே தலையாயது சிலப்பதிகாரமேயாதலால் இது முத்தமிழ் காப்பியம் என்று அழைக்கப்படுகின்றது. அக்கால மக்களின் ஆடல், பாடல்களில் இருந்த கலை வடிவங்களுக்கு எழுத்து வடிவம் கொடுத்தள்ளார் இளங்கோவடிகளார். நாட்டுப்புற வடிவங்கள் பல இந்நூலில் இடம்பெற்றுள்ளன. சங்கமருவிய காலத் தமிழ் மக்கள் என்னென்ன வடிவமுள்ள பாடல்களைப் பாடினார்கள், என்னென்ன கூத்துக்களை ஆடினார்கள். என்பதை எல்லாம் சிலப்பதிகாரத்தினுடாக அறிந்து கொள்ள முடியும். அந்த வகையில் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ள இசைச் செய்திகள் எவை என கண்டறிந்து அது தமிழிசை வளர்ச்சியில் எவ்வாறு பயன்படுகின்றது என்பதை ஆராய்தலை நோக்கமாகக் கொண்டு இலக்கிய ஆய்வு மற்றும் விவரண ஆய்வு முறையில் இவ்வாய்வு அமைகின்றது.

### சிலப்பதிகாரம்

தமிழின் ஐம்பெரும் காப்பியங்களான சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி இவைகளில் முதன்மையான காப்பியம் சிலப்பதிகாரம் எனலாம். "சேரன் தம்பி சிலம்பிசைத்தான்" என்பதற்கிணங்க இளங்கோவடிகளால் சிலப்பதிகாரம் எழுதப்பட்டது. இதன் காலம் சங்க காலம் என்றும், அதற்கு பிற்பட்ட காலம் என்றும் கூறுகின்றனர். சிலப்பதிகாரம் புகார் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் ஆகிய முப்பிரிவுகளாகக் காணப்படுகின்ற அதேவேளை முப்பது காதைகளையும் கொண்டு அமைந்துள்ளது.

சிலப்பதிகாரம் இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றையும் தன்னகத்தே கொண்டுள்ளதால் இது முத்தமிழ் காப்பியம் எனப்பட்டது. இக்காப்பியத்தில் இசை பற்றிய பல குறிப்புக்கள் காணப்படுகின்றன. பல இசைப்பாடல்களும் இதில் இடம்பெற்றுள்ளன. காப்பியத்தின் தொடக்கத்திலேயே மங்கலவாழ்த்துப்பாடலாக "திங்களைப்போற்றுதும் திங்களைப்போற்றுதும்" என்று ஓர் இசைப்பாடலை அமைத்து இசைத்தமிழில் தமக்கிருந்த ஆழ்ந்த ஆர்வத்தையும் புலமையையும் வெளிப்படுத்தியுள்ளார். சிலப்பதிகாரத்து இசை என்னும் போது பொதுவாக சிலப்பதிகாரத்தில் அரங்கேற்றுக்காதையில் கூறப்பட்டுள்ள யாழாசிரியன், குழலாசிரியன், இசையாசிரியன், தண்ணுமையாசிரியன் போன்றோரின் இலக்கணங்களும், யாழிசைக்கரணங்களும், பலை இலக்கணம் போன்ற இசை இலக்கணங்கள் ஆய்ச்சியர் குரவை, ஊர்காண்காதை, வேனிற்காதை போன்ற காதைகளிலும் இசை பற்றிய செய்திகள் கூறப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

### பாடல்களின் அமைப்பு

சிலப்பதிகாரத்தில் காணப்படும் பாடல்களில் ஒரு பொருள் மீது மூன்றடுக்கு அல்லது நான்கடுக்கு அமைப்பைக் காண்கிறோம். சான்றாக "திங்கள்மாலை வெண்குடையான்" எனத்தொடங்கும் ஆற்றுவரிப்பாடல் அமைப்பை நோக்கலாம். இவ்வமைப்பு நாட்டுப்புற கதைப்பாடல்களை நமக்கு நினைவூட்டுகின்றது. நாட்டுப்புறப்பாடல்களில் ஒரு பொருள் மீது பல அடுக்குகள் வந்து மிக நீண்ட பாடல்களாக இருப்பதை அவதானிக்கலாம்.

**மாத்திரை**

குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் ஆகிய நரம்புகளுக்கு மாத்திரை முறையே.

**"குரல் துத்தம் நான்கு கிளை மூன்று இரண்டு ஆங்கு**
**உரையா உழை இளி நான்கு – விரையா"**

ஏன்ற பாடல் மூலம் நரம்புகளின் மாத்திரைகளினைக்கூறியுள்ளார். மாத்திரை அளவு பற்றி அரங்கேற்றுக்காதையில் இளங்கோவடிகளாரால் குறிப்பிடப்படுவதிலிருந்து மொத்தமாக 22 மாத்திரைகள் உள்ளன. இதனை வடநூலார் 22 சுருதிகள் என்பர். இந்த 22 சுருதி முறை நம் இசையில் தொன்று தொட்டு வழக்கில் இருந்து வருகின்றது. மாத்திரை அலகு, சுருதி என்பவை ஒரே பொருளைக் கொண்டவையாகும்.

**வட்டப்பாலை**

வட்டப்பாலையே ஏழ்பெரும் பாலைகள் பிறப்பிற்கு அடிப்படையாக அமைகின்றன. இதனை.
"ஆழியும் ஆரும் போல சீருசி சிறுதிகைக்கண்..." (சினேந்திரமாலை ஆருட சக்கரம்)

இடபத்தில் இளியும் கடகத்தில் விளரியும் சிம்மத்தில் தாரமும் துலாத்தில் குரலும் தனுசில் துத்தமும் கம்பத்தில் கைக்கிளையும் மீனத்தில் உழையும் நிற்கும். இதனை
"இளி இடபம் கற்கடகமாம் விளரி, சிங்கம்..." என்ற பாடல் மூலம் கூறப்படுகிறது.

குரவைக்கூத்தாடிய எழுவரும் மேற்கு திசை முதலாக குரல் முதலிய 7 நரம்பால் இராசி வட்டத்தில் நிற்கும் .தொன்முறையில் வட்டமாய் நின்றனர். இதனை ஆசிரியர் வட்டம் வரைந்து அதனை 12 பாகங்களாகப் பிரிந்து 12 இராசிகளிலும் குரல் முதலிய ஏழு நரம்புகள் நிற்கும்.

**ஏழு பாலையிசைகள்**

மேற்குறிப்பிட்ட வட்டப்பாலையினை ஆதாரமாகக் கொண்டு குரல் திரிந்து ஏழுபாலைகள் பிறக்கின்றன. அவ் ஏழு பாலைகளும் அதற்குரிய தற்கால இணை இராகங்களும் நிறுவப்பட்டுள்ள போதிலும் ஆய்வாளர்களிடையே அடிப்படைப் பாலை பற்றிய கருத்து வேறுபாடு காணப்படுகின்றன. ஆயினும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட இராகங்கள் பின்வருமாறு.

| **பாலையின் பெயர்** | **தற்கால இணை இராகம்** |
|---|---|
| செம்பாலை | ஹரிகாம்போதி |
| படுமலைப்பாலை | நடனபைரவி |
| செவ்வழிப்பாலை | - |
| அரும்பாலை | சங்கராபரணம் |
| கோடிப்பாலை | ஹரகரப்பிரியா |
| விளரிப்பாலை | தோடி |
| மேற்செம்பாலை | கல்யாணி |

**பண்**

பண்டைய தமிழிசையில் பண் என்ற சொல் இராகத்தையே குறிக்கும். அரும்பத உரையாசிரியர் பண்ணைப்பற்றி பாடும் போது உலியை அழகுற வெளிப்படுத்தவதற்கு குரல் நாண்களை முறையில் செயற்படுத்த வேண்டும் அவை எடுத்தல், படுத்தல், நலிதல், அசைவு, கம்பிதம், குடிலம், உருட்டு, தாக்கு சிலப்பதிகாரத்தில் இசையாசிரியரின் அமைதி பற்றிக் கூறும் போது இசையாசிரியன் என்பவன் யாழ் பாடலிலும், வங்கியப்பாடலிலும், தானக் கூறுப்பாடுகளிலும், மிடற்றுப்பாடலிலும், தண்ணுமையிலும், கூத்துக்களிலும் வல்லவனாயும் அவற்றோடு பொருத்தமுற பாடுபவனாயும் இருக்க வேண்டும் என்று கூறுகிறார்.

**தாளம்**

அரங்கேற்றுக்காதையில் தாளம் பற்றி கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**"ஆடலும் பாடலும் பாணியுந் தூக்கும்.." (அரங்கேற்றுக்காதை 45 வரி)**

சிலப்பதிகாரத்தில் தாளம் என்பது சீர் என்றும் பாணி என்றும் தூக்கு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அடியார்க்கு நல்லார் கருத்துப்படி சீர் அல்லது பா 4 அங்கங்களைக் கொண்டதாகும்.

**இசையுருப்படிகள்**

இசை என்ற சொல் இசைத்தமிழின் குறுகிய வடிவம் இது பாட்டையும், பண்ணையும் குறிக்கும். இசைஉருப்படி, உரைநடைகளில் உரு என்ற சொல்லால் குறிக்கப்படுகிறது. கூத்துக்களைச் சார்ந்த உருப்படிகளும் வழக்கில் இருந்தன. அக்காலத்தில் பக்திப்பாடல்களும், லௌகீக இசை உருப்படிகளும் இருந்ததாக தெரிகிறது. அவைகள் பல வகையாகப்பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் சில செந்துறை, வெண்டுறை, பெருந்தேவபாணி, சிறுதேவபாணி, பெருவண்ணம் பேன்ற பலவற்றினைக் குறிப்பிடலாம்.

**இசைக்கருவிகள்**

இசைக்கருவிகள் மனிதனின் குரல் உட்பட்டு பகுக்கப்பட்டன. குரல் என்பது மிடற்றுக்கருவி என்றும் இசைக்கருவி என்பது குயிலுவக்கருவி என்றும் கூறப்பட்டுள்ளது. அடியார்க்கு நல்லார் இசைக்கருவிகளின் பாகுபாட்டை விளக்குகிறார். அவையாவன தோல்க்கருவி, துளைக்கருவிகளுள் குரல் முதன்மையாக விளங்குகிறது. சிலம்பின் தலைவன் கோவலன் குழல் வாசிப்பதில் வல்லவனாக உள்ளான். அடியார்க்கு நல்லார் உரையில் குழல், வங்கியம், புல்லாங்குழல், வேங்குழல் எனப்பலவாறு கூறுகிறார். அரங்கேற்றுக்காதையில் குழலாசிரியன் சிறப்பு, வாசிக்கும் முறை பற்றியும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. ஆய்ச்சியர் குரவையில் கொன்றை குழல், ஆடல் குழல், முல்லைக்குழல் என மூவகைக் குழல் வாத்தியங்கள் கூறப்பட்டுள்ளன.

**யாழ்**

யாழ்கள் பலவகை வழக்கிலிருந்து வந்தன. யாழ் எனப்படும் நரம்புக்கருவி பேரி யாழ், மகர யாழ், சகோட யாழ், செங்கோட்டி யாழ் என நால்வகைப்படும். பேரியாழுக்கு இருபத்தொரு நரம்புகளும், மகர யாழுக்கு பத்தொன்பதும், சகோட யாழுக்கு பதினாலும், செங்கோட்டி யாழுக்கு ஏழு நரம்புகளும் கூறப்பட்டுள்ளன. வேனிற்காதையில் யாழின் உறுப்புக்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இசைக்கருவிகள் அனைத்தையும் முக்கியமாக யாழை மழை, வெயில் இவற்றிலிருந்து பத்திரப்படுத்த வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

**தோற்கருவிகள்**

தோற்கருவிகள் பற்றிக்கூறுமிடத்து தண்ணுமைக்கருவிகள் என்று கூறுகிறார். ஆரங்கேற்றுக்காதையில் தண்ணுமை ஆசிரியரின் அமைதி பற்றிக் கூறுமிடத்து

**"ஆடல் பாடல் இசையே தமிழே
புண்ணே பாணி தூக்கேமுடமே..
ஆத்தகு தண்ணுமை அருந்தொழில் முதல்வனும்"**

மூவகைத் தமிழ்களும் எல்லாப்பண்களும் அருவகைத்தாளங்களும், எழுவகைத்தூக்குகளும் அவற்றின் குற்றங்களும் யாழ் குழல் பாடலுக்கு ஏற்ப இசைத்தும் இதாளம் தவறாமல் மற்றக்கருவிகளின் குறையை நிரப்புதலும் பகுதியை அடக்குதலும் அழகு பெற வாசிப்பதில் வல்லவனாகவும் இருக்க வேண்டும் என்று கூறுகிறார். சிலம்பின் மங்கல வாழ்த்துப்பாடலில் கோவலன், கண்ணகி மணவிழாவின் பொழுது "முரசியம்பின் முருடதிர்ந்தன் முறையெழுந்தன பணிலம்பு முரசு மத்தளம், சங்கு முதலிய இசைக்கருவிகள் முறையாக வாசிக்கப்பட்டதாக அறிகிறோம். மேலும் தண்ணுமை ஆசிரியனுக்கு உரிய இலக்கணம், அவனுடைய அமைதி கருவிகளைக்கையாளும் அறிவுத்திறன். போன்ற தகவல்களும் சிலப்பதிகார அரங்கேற்றுக்காதையில் காணப்படுகின்றன.

**இசையமைதி**

சிலம்பின் அரங்கேற்றுக்காதையில் மாதவியினுடைய நடன அரங்கேற்ற முறைகளைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது. மேலும் இசையாசிரியனுக்கு உரிய இலக்கணம் முழுமையாகவும் அழகாகவும் கூறப்பட்டுள்ளது.

**"யாழுங் குழலும் சீருமிடறும்**
**தாழ்குரல் தண்ணுமை ஆடலொடிவற்றின்**
**இசைந்த பாடல் இசையுடன் படுத்து**
**வரிக்கு மாடற்கும் உரிய பொருளியக்கி" (அரங்கேற்றுக்காதை 26)**

இப்பாடலில் இசையாசிரியன் கழல்இயாழ் இபாட்டுஇதாளம்இதண்ணுமை என்ற மிருதங்கம் இசைக்கருவிகளில் இசையை நேர்த்தியாக இசைப்பதோடு மட்டுமல்லாமல் பாடலுக்கு ஏற்றவாறும் இசையை அமைத்தல் வேண்டும் .பாடலின் பொருளுக்கேற்றவாறும் ஆடலாசிரியன் எதிர்பார்க்கும் எண்ண ஓட்டத்திற்க ஏற்ற படியும் பாடலின் எந்தப் பகுதிக்கு எவ்வகை இசை பொருந்தும் வண்ணம் இருக்கும் என்ற அறிவினைப் பெற்றவனாகவும் இசைக்கருவிகளை இசைத்து வழிநடத்திச் செல்லும் பெருந்தகுதி உடையவனாகவும் இருக்க வேண்டும் எனவும் கூறுகிறது.

**முடிவுரை**

தமிழிசையின் ஒப்பற்ற கலைப் பொக்கிசமாகத் திகழ்கின்ற சிலப்பதிகாரம் தமிழிசை மரபில் ஓர் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது. தற்காலத்தில் பெயர் மாற்றம் பெற்று வடமொழியில் குறிப்பிடப்படும் அத்தனை கலைச் சொற்களும், அவற்றின் விரிவான விளக்கங்களும் சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அவை முழுமையாக தமிழிசையில் பயன்படுத்தப்படவில்லை என்பது வேதனைக்குரிய விடயமாகும். அந்தவகையில் முத்தமிழ் காப்பியமான சிலப்பதிகாரம் தமிழிசையில் தனிப்பெரும் செல்வாக்குடன் திகழ்கின்றதெனின் மிகையாகாது.

**துணைநூற்கள்**

1. அங்கயற்கண்ணி. இ, "சிலப்பதிகாரத்தில் காணப்படும் இசைப்பாடல்கள்", அழகு அச்சகம், தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1994
2. அருணாசலம். மு, "தமிழிசை இலக்கிய வரலாறு", கடவு பதிப்பகம், மதுரை, 2009
3. அங்கயற்கண்ணி. இ, "தமிழக இசையும் ஆய்வும்"இ தஞ்சாவூர், 2002
4. இராமநாதன். பி, "தொன்மைச் செம்மொழித் தமிழ", செம்மேடு பதிப்பகம், 2009
5. இளங்குமரன். இரா,"தமிழிசை இயக்கம்", மாணிக்கவாசகர் பதிப்பகம், சென்னை, 1993